**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13 -ம் நாள்**

**CC. No.466 of 2025**

**(CNR No.TNVP10-02021-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.466/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 119/2025,<br>பிரிவுகள் 281, 125(b) BNS |
| 3 | எதிரிகளின் விவரம் | | ஞானமூர்த்தி, வயது 45,<br>த/பெ பாலன்,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>பட்டணம் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 27.03.2025 |
| 5 | முறையீடு | : | 27.03.2025 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Bailed by Police |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 30.08.2025 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 28.11.2025 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:07:54 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-2 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-3 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-4 | 07.03.2026 | 07.03.2026 |
| | | | PW-5 | 16.03.2025 | 16.03.2025 |
| | | | PW-6 | 16.03.2025 | 16.03.2025 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSS - ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 18.03.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது BNS பிரிவுகள் 281, 125(b) - ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:08:01 +0530

இவ்வழக்கானது கடந்த 30.08.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 23.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முருகன், B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

திண்டிவனம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பூதேரி பகுதியில் இவ்வழக்கின் சாட்சி - 1 ஆன கஸ்தூரி என்பவர் வசித்து சித்தாள் வேலை செய்து வருபவர் ஆவார். சாட்சி - 1 கஸ்தூரி வழக்கம்போல் சித்தாள் வேலை செய்வதற்காக 27.03.2025 காலை 8.00 மணிக்கு திண்டிவனம் செஞ்சி பேருந்து நிலையத்தில் சாலையை கடக்கும்போது எதிரியானவர் PY 01 BL 5989 என்ற பதிவெண்ட கொண்ட இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சாட்சி -1 ஆனவரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக எதிரி மீது BNS பிரிவு 281, 125(b) ன்படி திண்டிவனம் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:08 +0530

2. இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது பிரிவுகள் 281, 125(b) - BNS ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230- BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) - BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள், சாட்சியம் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் .சுருக்கம்**

- ➔ காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 விபத்து பற்றியும் அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் விபத்து பற்றி சாட்சியம் அளித்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு எதிரியை அடையாளப்படுத்தி உள்ளனர்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:15 +0530

- ➔ பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 ஆகியோர் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351 (1)(b) – BNSS - ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) **<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) - BNS -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10)அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன் வைக்கப்படவில்லை.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் சம்பவ இட சாட்சிகள் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். எதிரி கவனக்குறைவாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:23 +0530

வாகனத்தை ஓட்டி வந்ததாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சம்பவ இடம் குறித்து முரண்பட சாட்சி அளிக்கப்பட்டுள்ளது. பார்வை மகசரில் சாட்சிகள் குறிப்பிட்டுள்ள இடங்கள் வரைபடத்தில் இல்லை. எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார். எதிரி தரப்பில் (1998 (8) SCC 493) என்ற முன் தீர்ப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

வழக்கில் காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திருமதி. கஸ்தூரி** அவரது சாட்சியத்தில் கடந்த 27.03.2025 தான் வழக்கம்போல் வேலைக்கு செல்வதற்காக தனது மருமகன் அரங்கநாதன் இருசக்கர வாகனத்தில் வீட்டிலிருந்து திண்டிவனத்தில் உள்ள செஞ்சி பேருந்து நிறுத்தத்திற்கு சென்றதாகவும், அந்த இடத்தில் ரோட்டை கடப்பதற்காக சாலையின் ஓரமாக நின்றபொழுது திண்டிவனத்தில் இருந்து செஞ்சி மார்க்கமாக இருசக்கர வாகனம் வந்து தன் மீது மோதி தனது வலது காலில் அடிபட்டதாகவும், அங்கிருந்தவர்களும் அரங்கநாதனும் ஆட்டோவில் தன்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஒட்டிய நபரை அடையாளம் காட்ட இயலாது எனவும், மருத்துவமனையில் போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 தன்னை இறக்கிவிட்டு தனது மருமகன் சுமார் 300, 400 மீட்டர் தொலைவில் உள்ள உழவர்

Digitally signed by ELAVARASI
ELAVARASI
Date: 2026.03.27 17:08:30 +0530

சந்தைக்கு சென்று விட்டார் எனவும், விபத்து நடந்த உடன் தான் மயக்கமாகிவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற கேள்வியின் போது அ.சா.1 வழக்கின் எதிரியை இதற்கு முன்பு பார்த்ததாக நினைவில்லை என குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 அவரது வலது காலில் அறுவை சிகிச்சை செய்ததாக கூறினார். நீதிமன்ற சாட்சியத்தின் போது நடக்க இயலாமல் கோலூன்றி வந்து நிற்க இயலாததால் அமர்ந்து சாட்சியம் அளித்தார்.

13.அ.சா.1 ன் மருமகன் மற்றும் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. அரங்கநாதன்** அவரது சாட்சியத்தில் கடந்த 27.03.2025 மாலை 8 மணியளவில் பூஜை அறையில் இருந்து தனது மாமியார் அ.சா.1-யை திண்டிவனத்தில் உள்ள செஞ்சி ரோட்டில் உள்ள அம்மா உணவகத்துக்கு எதிரில் இறக்கிவிட்டு தான் உழவர் சந்தைக்கு சென்றதாகவும், திரும்பி வரும்போது கூட்டமாக இருந்ததாகவும் சென்று பார்த்த போது தனது மாமியாருக்கு காலில் அடிபட்டு இருந்ததாகவும், PY 01 5959 Bajaj இருசக்கர வாகனத்தையும், எதிரியையும் போலீசார் பிடித்திருந்தார்கள் எனவும், தனது மாமியாரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரியின் பெயர் ஞானமூர்த்தி என்று அவரது மாமனார் மருத்துவமனையில் கூறியதாக குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் மருத்துவமனையில் போலீசார் வந்து விசாரித்து சென்ற பிறகு எதிரியின் மாமனார் வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:36 +0530

14. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு. பூபாலன்** அவரது சாட்சியத்தில் கடந்த 27/3/2025 காலை 8 மணி அளவில் திண்டிவனத்தில் வசந்த் அண்ட் கோ வில் இருந்து செஞ்சி பேருந்து நிறுத்தத்திற்கு சவாரி சென்று நின்று கொண்டிருந்தபோது ஆட்டோவின் பின்புறம் அ.சா.1 ரோட்டின் ஓரமாக நின்று கொண்டு இருந்தார் எனவும், அப்பொழுது திண்டிவனத்திலிருந்து PY 01 BL 5989 இருசக்கர வாகனம் வந்து அ.சா.1 மீது மோதியதாகவும், அதில் அ.சா.1 க்கு காலில் அடிபட்டதாகவும், தான் தனது ஆட்டோவில் அ.சா.1-யை திண்டிவனம் மருத்துவமனையில் இறக்கி விட்டதாகவும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவர் ஆஜர் எதிரி எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 பேருந்து நிறுத்தம் அருகே தான் ஆட்டோவில் வெளியில் நின்று கொண்டிருந்தபோது ஆட்டோக்கு பின்புறத்தில் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

15. கடந்த 27/3/2025 காலை 8 மணி அளவில் திண்டிவனத்தில் உள்ள செஞ்சி பேருந்து நிறுத்தத்தில் அ.சா.1 சாலையை கடக்கும் போது எதிரி PY 01 BL 5989 பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக முட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா.1 ன் வலது முழங்காலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

16. சம்பவ இடம் குறித்து புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:42 +0530

அறிக்கையில் திண்டிவனத்தில் உள்ள செஞ்சி பேருந்து நிலையம் சாலை என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரும் செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே என குறிப்பிட்டுள்ளனர். மாதிரி வரைபடத்தில் திண்டிவனத்தில் இருந்து செஞ்சி செல்லும் மார்க்கமாக உள்ள சாலை மற்றும் அதை சுற்றி உள்ள கடைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் செஞ்சி பேருந்து நிறுத்தம் குறிப்பிடப்படவில்லை. இது புலன் விசாரணையின் குறைபாடாகும். சம்பவ இடம் எது என்பது குறித்து அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் புகார் மற்றும் இறுதி அறிக்கையில் சாலையை அ.சா.1 கடக்கும்போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இட சாட்சிகளான அ.சா.1, அ.சா.3 ஆகியோர் சாலையின் இடது ஓரமாக நின்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். மாதிரி வரைபடத்தில் திண்டிவனம் செஞ்சி ரோட்டில் அம்மா உணவகத்துக்கு எதிரே ஜெயராம் கல்யாண மண்டபம் அருகில் சாலையில் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1, அ.சா.3 ஆகியோர் இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ள போதிலும், கவனக்குறைவு குறித்து எவ்வித சாட்சிமும் முன்னிடப்படவில்லை. அ.சா.1 விபத்து ஏற்பட்டவுடன் மயக்கமானதாக கூறி, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் மற்றும் எதிரியை குறித்து எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. விபத்து நடந்த பிறகு அந்த இடத்திற்கு வந்த அ.சா.2 அவரது மாமியார் அ.சா.1 வலது காலில் அடிபட்டு கிடந்ததாகவும், போலீஸர் எதிரி மற்றும் இருசக்கர வாகனத்தை பிடித்துக் கொண்டு இருந்ததாக குறிப்பிட்டுள்ளனர். எனினும் புலன் விசாரணை அதிகாரி 27.03.2025

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:08:50 +0530

அன்று வழக்குப்பதிவு செய்யப்பட்டு 25.04.2025 அன்று காவல் நிலையம் முன்பு ஆஜரான எதிரியை கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்ததாக குறிப்பிட்டுள்ளார். அதுவரை எதிரி தலைமறைவாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

17. புகார் வாக்குமூலத்தில் இருசக்கர வாகனத்தின் பதிவு என்னை குறிப்பிட்டு அதன் ஓட்டுனர் ஞானமூர்த்தி வயது 33 தகப்பனார் பெயர் பாலன் எண்.14 மாரியம்மன் கோயில் தெரு, வட்டம் திண்டிவனம் என பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியின் பெயரை குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட போதிலும், முதல் தகவல் அறிக்கையில் எதிரி குறித்து இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு அதன் ஓட்டுனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது புலன் விசாரணையின் மற்றொரு குறைபாடு ஆகும்.

18. அ.சா.1 க்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் 27.03.2025 அன்று காலை 8:30 மணி அளவில் அ.சா.1-யை அவரது மருமகன் அரங்கநாதன் சிகிச்சை அளித்து வந்ததாகவும், அன்றைய தினமே காலை 8 மணிக்கு செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே இரு சக்கர வாகனம் மோதியதாகவும், அ.சா.1 க்கு வலது காலில் வீக்கமும் இடது கை முட்டியில் தொடு வலியும் இருப்பதாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதற்கு மருத்துவரின் வாக்குமூலத்தில் எந்த ஒரு காரணமும் குறிப்பிடப்படவில்லை. அ.சா.1-ன் மற்ற மருத்துவ ஆவணங்கள் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. அ.சா.1 அவருக்கு வலது காலில் காயம் ஏற்பட்டு அறுவை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:08:55 +0530

சிகிச்சை செய்ததாக நீதிமன்ற சாட்சியத்தின்போது கூறி கோலூன்றி நடந்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

19. மேற்படி சாட்சியங்களில் இருந்து அ.சா.1 க்கு விபத்து ஏற்பட்டு வலது காலில் காயம் ஏற்பட்டது மற்றும் விபத்து ஏற்படுத்திய இரு சக்கர வாகனத்தை எதிரி ஓட்டி வந்தார் என்பதும் தெளிவாகிறது. சம்பவ இடம் குறித்தும் அ.சா.1 சாலையின் எந்த இடத்தில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டது என்பது குறித்தும் அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் எதிரி கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி வந்ததாக சூழ்நிலைகள் எதையும் சாட்சிகள் குறிப்பிடப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு. வசந்த்** மற்றும் **அ.சா.5 திரு. சுந்தர்** அவர்களது சாட்சியத்தில் கடந்த 27.03.2025 காலை 10:30 மணி அளவில் திண்டிவனம் செஞ்சி பேருந்து நிறுத்தத்தின் அருகே விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்து கையொப்பம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளனர். அ.சா.4 குறுக்கு விசாரணையில் தான் பூதேரி கிராமத்தை சேர்ந்தவன் எனவும், தற்போது கிடங்கலில் வசித்து வருவதாகவும், செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே உள்ள முருகன் ஹோட்டல் கடை அருகே இருந்த போது போலீசார் விசாரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.5 செஞ்சி பேருந்து நிலையத்தில் இருந்து சந்தைமேடுக்கு செல்லும் சாலையில் வலது புறமாக அம்மா உணவகம் உள்ளதாகவும், அதன் அருகே உள்ள தீபம் மருத்துவமனைக்கு அருகே உள்ள

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:09:01 +0530

அங்காளம்மன் கோயிலில் தான் இருந்ததாகவும், அம்மா உணவகத்துக்காக எதிரே ஜெயராமன் கல்யாண மண்டபம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்

21. இவ்வழக்கிற்கும், புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு. ரங்கநாதன் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 27/1/2025 அன்று திண்டிவனம் அரசு பொது மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த அ.சா.1-யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே காலை 11:30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவத்தில் தொடர்புடைய வாகனத்தின் ஓட்டுநரை தேடி வந்தபோது அவர் தலைமறைவாக இருந்ததாகவும், பின்னர் 25/4/2025 அன்று எதிரி காவல் நிலையம் முன்பு ஆஜரானார் எனவும், அவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். அன்றைய தினமே விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவரின் காயச்சான்றின் அடிப்படையில் சட்ட பிரிவுகளை மாற்றம் செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரியின் மீது BNS 281, 125(b) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

22. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.6 கண்ணுற்ற சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்ட வில்லை எனவும், புகார் வாக்குமூலத்தில் எதிரியின் பெயர்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:09:07 +0530

குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் முகவரியின்படி சம்பவ இடத்தை சார்ந்தவர்கள் அல்ல. வரைபடத்தில் அங்காளம்மன் கோவில், தீபம் மருத்துவமனை, முருகன் ஹோட்டல் அல்லது இட்லி கடை குறிப்பிடவில்லை. வழக்கு பதிவு செய்யப்பட்டு ஒரு மாத காலம் கழித்து எதிரி கைது செய்யப்பட்டதாகவும், அதுவரை அவர் தலைமறைவாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். போலீஸ் Police Standing Order 661 ன் குற்ற இறுதி அறிக்கை உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் பதிவு செய்யலாம் என குறிப்பிட்டுள்ளார்.

23. காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரான அ.சா.1 விபத்து பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதன் ஓட்டுநரை அ.சா.1 குறிப்பிடவில்லை. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 விபத்து நடந்த பிறகு வந்து பார்த்ததாக கூறி எதிரியை அடையாளப்படுத்தி உள்ளார். கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3 விபத்து பற்றி சாட்சியம் அளித்து விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் குறிப்பிட்டு எதிரியை அடையாளப்படுத்தி உள்ளார். அ.சா.1, அ.சா.3 ஆகியோர் எதிரி கவனக்குறைவாக வந்ததாக எவ்வித சூழ்நிலையும் குறிப்பிடவில்லை. பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4, அ.சா.5 ஆகியோர் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவ இடமாக குறிப்பிடப்பட்டுள்ள செஞ்சி பேருந்து நிறுத்தம் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. புகார்

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:09:13 +0530

வாக்குமூலத்தில் எதிரியின் பெயர், வயது, தகப்பனார் பெயர் முகவரி குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முதல் தகவல் அறிக்கையில் எதிரி குறித்து இருசக்கர வாகனத்தின் பதிவெண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. இது புலன் விசாரணையின் குறைபாடாகும். இது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் உள்ளது. அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து அ.சா.1 மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அவரது வலது காலில் கொடுங்காயம் ஏற்படுத்தியதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள்படியாக எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS -ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

25. **இறுதியாக, எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) - ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

26. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:09:22 +0530

செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 -ம் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்து.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:09:30 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.கஸ்தூரி | காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. அரங்கநாதன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.பூபாலன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.வசந்த் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு.சுந்தர் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | திரு.ரங்கநாதன்,சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.03.2025 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.2 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 5 |
| அ.சா.ஆ.4 | 27.03.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 27.03.2025 | பார்வை மகசர் | அ.சா.5 |
| அ.சா.ஆ-6 | 27.03.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 28.04.2025 | PY 01 BL 5989 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ-8 | 27.03.2025 | அ.சா.1 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | 01.05.2025 | பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:09:39 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.